## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 93/2018 |
| Deposition of witness for | Prosecution wit. PW.2 |
| Name | தர்மர் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 08-11-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது திருவைகுண்டம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன் . இதற்கு முன்பு ஏரல் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்த போது கடந்த 04.12.2016 ம் தேதி காலை 10.30 மணிக்கு ஏரல் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இம்மானுவேல் ஜெயசேகர் மற்றும் முதல்நிலைக்காவலர் ரிகன் ஆகியோர் சேர்ந்து குற்ற எண். 345/2016 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட 1ம் எதிரியை தேடி ஆறுமுகமங்களம் ரோந்து சென்றோம்.

2. அங்கு சென்ற போது காவலர்களாகிய எங்களை பார்த்த எதிரி ஓட முயற்சித்தார். நாங்கள் எதிரியை மடக்கி பிடித்து விசாரித் த போது எதிரி

தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட போது இராமசாமி மற்றும் சுயம்பு ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

3. ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போது 1ம் எதிரி இடையற்காடு நடுத்தெருவில் வசித்து வருவதாகவும், பின்னர் எதிரி கொடுத்த தகவலின் பேரில் அத்தாட்சி மகஜர் வாயிலாக வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது அப்பொழுது நான் உடன் இருந்தேன் . ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். எதிரிகளை எனக்கு தெரியும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை

4. ஆறுமுகமங்கலம் பிள்ளையார் கோவிலுக்கு இரு பக்கமும் வீடுகள் உள்ளதா என்றால் சுமார் 500 வீடுகள் உள்ளது இந்த 500 வீடுகளும் கோயிலை சுற்றிதான் இருந்தது என்றால் சரிதான் அந்தஅந்த வீடுகளில் ஆட்கள் இருந்ததா என்றால் இருந்தது

5. கைது செய்யும் போது பொதுமக்கள் இருந்தார்களா என்றால் 2, 3 பேர் இருந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் ஐந்து ஆறுபோர் கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை,. ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் கைப்பட எழுதினாரா என்றால் கைப்படதான் எழுதினார்

6. கைப்பட எழுதப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட பின் கையொப்பம் செய்தேன் பிரிண்ட்அவுட் எப்போது எடுத்தார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து எடுத்தார்கள் சாட்சி மீண்டும் சம்பவ இடத்தில் வைத்து எடுத்தார்கள் என்று சொன்னார்

7. சம்பவ இடத்தில் கம்பியூட்டர் மற்றும் பிரிண்ட் எடுக்கும் கருவிகள் கொண்டு செல்லப்பட்டதா என்றால் லேப்டாப் மட்டுமே எடுத்து செல்லப்பட்டது. லேப்டாப் எடுத்து சென்றேன் என்று செல்வது பொய் என்றால் சரியல்ல நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும் அந்த இடத்தில் அந்த நேரத்தில் எந்தவிதமான பொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை